# பாததும்பர பிரதேச சபை

# கண்டி மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 27 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஆகஸ்ட் 27 ஆந் திகதி சபைத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பாததும்பர பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைத் தலைவர், ,அங்கத்தவர், உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் உள்ளடங்கலான 16 பேருக்கு விற்பனை செய்யப்பட்ட 17 நீர்த் தாங்கிகளால் சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 188,320 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மத்திய மாகாண சபையினூடாக மீளாய்வாண்டின் போது நன்கொடையாகப் பெறப்பட்டிருந்த 32 ஸ்ரீ 4636 ஆம் இலக்க ஜீப் வண்டியும் சீபீஆர்டபிள்யூ 7080 ஆம் இலக்க கழிவு கையுழவு இயந்திரம் போன்ற வாகனங்களின் பெறுமதி கணிப்பிடப்பட்டு கணக்குகளில் காண்பிக்கப்பட்டிராமையால் நிலையான சொத்துக்கள்

(இ) 23 சந்தர்ப்பங்களுக்கு உரித்தான ரூபா 5,651,000 தொகையான மதிப்பிடப்பட்ட ஏற்பாட்டில் 12 சதவீதமான ரூபா 687,399 தொகை செலவினமாக ஏற்கப்பட்டிருந்ததுடன் இதன் பிரகாரம் 88 சதவீத ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.6 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2006 அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டிக் கைநூலின் 5.4.4 ஆம் பிரிவின் பிரகாரம், ஏற்கக்கூடிய முற்பணக் கொடுப்பனவில் பிணை பெறப்படாது சபை நிதியத்திலிருந்து 09 வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக ரூபா 900,000 தொகையான முற்பணம் 5 மக்கள் மேம்பாட்டுச் சங்கங்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஒப்பந்த உடன்படிக்கையின் படி, 2013 சனவரி 02 ஆம் திகதியில் உள்ளவாறு வேலை பூர்த்தியடைவதற்கிருந்த மடவல கொஸ்வத்த வீதி ± 2 ஆம் கட்ட கைத்தொழில்கள் இரண்டின் வேலை 2013 மே 31 ஆம் திகதியில் உள்ளவாறான கணக்காய்வுத் தினத்திலும் பூர்த்திசெய்யப்பட்டிராததுடன் வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 200,000 தொகையான முற்பணத் தொகை சபை நிதியத்திற்குச் செலவு வைக்கப்படுவதற்கு முடியாதிருந்த போதிலும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

(இ) 13 கைத்தொழில்களுக்காக வீதிகளில் விதிக்கப்பட்டிருந்த கொங்கிரீட் இன்டர்லொக் அமுக்க சக்தி அறிக்கை பெறப்பட்டிராததுடன் இதில் 07 கைத்தொழிகளுக்காக அமுக்க சக்தி அறிக்கை பெறப்படுவதற்காக ரூபா 700,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) அமுக்க சக்தி $25N/M^{M2}$ இற்குக் குறைவான 6 இன்டர்லொக் கல் வீதிகளுக்கு இடப்பட்டிருந்ததுடன் இவற்றில் 4 கைத்தொழில்களுக்காக ரூபா 2,000,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(உ) மொத்த செயற்திட்டத்தின் 0.2 சதவீதமே அமுக்க சக்தி பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அச் சதவீதத்தின் 10 சதவீதத்திலிருந்து 85 சதவீதம் வரையான சதவீதம் இன்டர்லொக் அமுக்க சக்தி குறித்த அளவைப் பார்க்கிலும் குறைவாகக் காண்பிக்கப்பட்டமையால்

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(ஈ) ஒப்பந்த நிர்வாகம்